**செய்தி வெளியீடு எண்: 36/2026** **நாள்: 07.05.2026**

**பத்திரிகைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், 'GEEF உலகளாவிய சுற்றுச்சூழல் சிறப்பு விருதுகள் 2026' நிகழ்வில், 2026 ஆம் ஆண்டின் சிறந்த உலகளாவிய சுற்றுச்சூழல் தலைமைத்துவமிக்க திட்டம் என்ற விருதினை வென்றுள்ளது**

GEEF உலகளாவிய சுற்றுச்சூழல் சிறப்பு விருதுகள் 2026-இல் (GEEF Global Environmental Excellence Awards 2026), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் “போக்குவரத்துத் துறை - மெட்ரோ இரயில் பிரிவில்”, “2026 ஆம் ஆண்டின் சிறந்த உலகளாவிய சுற்றுச்சூழல் தலைமைத்துவமிக்க திட்டம்” (Global Environmental Leadership Project of the Year 2026) என்ற விருதை பெற்றுள்ளது. இந்த விருது வழங்கும் விழா, வரும் மே 22, 2026 அன்று புதுதில்லியில் நடைபெற உள்ள உலகளாவிய எரிசக்தித் தலைவர்கள் உச்சி மாநாட்டில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கப்படவுள்ளது.

சென்னையில் மெட்ரோ இரயில் திட்டத்தின் திட்டமிடல், கட்டுமானம் மற்றும் இயக்கம் ஆகிய அனைத்து நிலைகளிலும் சுற்றுச்சூழல் சார்ந்த அம்சங்களை ஒருங்கிணைப்பதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முன்னணியான பங்களிப்பை இந்த விருது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. சுற்றுச்சூழல் செழுமை மிக்க பகுதிகளைப் பாதுகாப்பதற்காக வழித்தடங்களில் மாற்றங்களைச் செய்ததில் தொடங்கி, நிலையங்கள் மற்றும் உயர்மட்ட கட்டுமானங்களில் பசுமை வடிவமைப்பு அம்சங்களை இணைப்பது வரை, ஒரு பெரிய அளவிலான உள்கட்டமைப்புத் திட்டம் எவ்வாறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மீளுருவாக்கம் மற்றும் ஈடுசெய்யும் மரக்கன்றுகள் (Compensatory Plantations) மூலம் மிக விரைவான மர அடர்த்தி மீட்சியை மேம்படுத்த முடியும் என்பதை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நிரூபித்துள்ளது.

இந்த உலகளாவிய அங்கீகாரம், நிலையான போக்குவரத்து சேவையை வழங்குவதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும், பசுமையான மற்றும் வலிமையான சென்னையை உருவாக்குவதற்கான அதன் தொலைநோக்குப் பார்வையையும் மேலும் உறுதிப்படுத்துகிறது.

**வெளியீடு: கூடுதல் இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**